# முத்தமிழ் விழா




## 2012

## தமிழ் மன்றம்

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா

# முத்தமிழ் விழா

# 2012

வெளியீடு
தேசிய கல்வியியற் கல்லூரி
வவுனியா.

# முத்தமிழ்க்கீதம்

ராகம்: கிந்தோளம்

வானகம் போற்றும் மண்ணகம் போற்றும்
வண்மொழி எங்கள் தமிழ்மொழியே
தேனமுதூறும் சந்தனம் வீசும்
இன்மொழி எங்கள் தமிழ்மொழியே

முத்தமிழ் முறை (இ) லக்கணம் - நல்ல
முருகியலும் கலந்த மூத்ததமிழ்
சித்தம் கிறுங்கிடும் (இ) லக்கியச் சோலையில்
சீரிளமை பெறப் பூத்ததமிழ்

வித்தகரகத்தியன் வழிதொல்காப்பியன்
கபிலர் பரணர் நக்கீரர்
எத்தனையோ தவத்தோர் தலைமுறையாக
எழில்பெறத் துலக்கிய எழுந்தமிழே

முத்தமிழாய் முகிழ்த்து செம்மொழியாய்ச் சிறந்து
முழு உலகம் புகழ்பூத்தமொழி
வித்தகம் ஓங்கிடும் இலங்கு கல்லூரியில்
வளர்ந்து சிறப்புற வாழ்த்துகிறோம்.

# வாழ்த்துரை



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றம் நடத்துகின்ற முத்தமிழ் விழா-2012 குறித்து வெளியிடுகின்ற சிறப்பு மலருக்கு எனது நல்லாசிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

உலகளாவிய ரீதியில் தமிழ் மொழியின் சிறப்பு குறித்து பல்வேறு விழாக்கள், மாநாடுகள், ஆய்வரங்குகள் நடத்தப்பட்டு வருகின்ற நிலையில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றமும், முத்தமிழுக்கு விழா எடுத்து சிறப்பு மலர் ஒன்றினையும் வெளியிடுகின்றமை மகிழ்ச்சிக்கும் பாராட்டுக்குரியதுமாகும். தமிழ் மொழியின் சிறப்பு முத்தமிழால் எடுத்தியம்பப்படுகின்றது. முத்தமிழும் உலகெங்கும் பரந்து வாழும் தமிழினத்தவர்களை உறவுகள், பந்தபாசங்களுக்கு அப்பால் உணர்வுரீதியாக இணைந்திருக்கின்றமை ஏனைய இனத்தவர்களை ஆச்சரியத்துக் குள்ளாக்கியிருக்கின்றது. இந்த நிலமை முத்தமிழ் வளர்ச்சியினால் இன்னும் இறுக்கமாகவும் விரிவானதாகவும் வளர்ச்சியுறும் என்பது நம்பிக்கையாகும்.

இந்நம்பிக்கைக்கும், எதிர்பார்க்கைகளுக்கும் வலுச்சேர்க்கும் வகையில் எதிர்கால ஆசிரியர் சமூகமாக மாறப்போகும் தற்போதய முகிழ்நிலை ஆசிரியர்கள் முத்தமிழுக்கும் விழா எடுப்பது நல்ல சகுனமும் தமது தாய்குலத்துக்கு விழா எடுப்பதுமாக அமைகின்றது. முகிழ்நிலை ஆசிரியர்கள் தமது தொழிலிலும் முத்தமிழை முதன்மைப்படுத்தி செயற்பட இவ்விழா அடிப்படையாக அமையும் என நம்புகின்றேன்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் "முத்தமிழ் விழா" சிறப்புறவும் சிறப்புமலர் தமிழ்மணம் பரப்பவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**க.பேர்ணாட்**
பீடாதிபதி
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.

"யாதும் ஊரே யாவரும் கேளீர் " - என்றார் பூங்குன்றனார்.
"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவதெங்கும் காணோம்" - என்றார் பாரதியார்
"தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"
- என்றார் பாரதிதாசன்

# உப பீடாதிபதி (நிதி, நிர்வாகம்) அவர்களின் ஆசிச்செய்தி



**வ**வுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ்மன்றம் நடாத்தும் முத்தமிழ் விழாவுக்கும் அது தொடர்பான சிறப்பு மலருக்கும் ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி தனியே மாணவ ஆசிரியர்களிடத்தே கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மட்டும் விருத்தி செய்யவில்லை. கல்லூரியில் இயங்கும் பல்வேறு மன்றங்களினூடாக மாணவ ஆசிரியர்கள் தமது சுய ஆற்றல்களை வெளிப்படுத்தவும் மேலும் வளர்த்துக் கொள்ளவும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படுகின்றது.

கல்லூரித் தமிழ்மன்றமானது மாணவ ஆசிரியர்களிடத்தே பேச்சாற்றல், விவாதம், பட்டிமன்றம், கட்டுரை, கவிதை, ஓவியம், சிறுகதை, பாடலாக்கம், அறிவிப்பாளர் போன்ற துறைகளில் விருத்தி செய்து எதிர்காலத்தில் தாம் கடமையாற்றும் பாடசாலை மாணவர்களிடத்தே தமிழ்மொழி தொடர்பான ஆற்றல்களை வளர்க்க தமிழ்மன்றம் எடுக்கும் முயற்சிகள் பாராட்டத்தக்கது இதன் ஒரு வெளிப்பாடே முத்தமிழ் விழாவும் அதனோடிணைந்த மலர் வெளியீடுமாகும்.

இதற்காக ஆலோசனை வழங்கும் பீடாதிபதி, உபபீடாதிபதிகளையும் நெறிப்படுத்தும் போஷகர், செயற்படும் மன்ற உறுப்பினர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு எதிர்காலத்தில் தொடர்ச்சியாக முத்தமிழ்விழா சிறப்புமலர் வெளிவர எனது ஆசிகளையும் வழங்கி நிற்கின்றேன்.

**செ.சஹாப்தீன்**
உபபீடாதிபதி (நிதி, நிர்வாகம்)
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.

சங்கம் வளர்த்த தமிழ், தமிழ்ப் புலவர் காத்த தமிழ்
கங்கை கொண்ட எங்கள் தமிழ் வெல்லும் வெல்லும்
ஒரு காலம் நல்ல பதில் சொல்லும் சொல்லும்
- கண்ணதாசன்

# வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.
# முத்தமிழ் விழா-2012



இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என மூவகையாக தமிழின் இனிமை அள்ள அள்ளக் குறையாதது, தமிழை இலாவகமாகப் பாவிக்க ஆரம்பித்தால் அதில் பித்து ஏற்படும்.

ஆனால் நிகழ்காலத்தில் மொழி என்பது தொடர்பாடலுக்காக விளங்கினால் போதுமானது என்கின்றனர். மொழிக்கலப்பு மிகவும் அலட்சியமாகப் பார்க்கப்படுகிறது. இது மொழிபற்றிய அறிவீனத்தாலும், இயலாமையாலும் ஏற்படும் விளைவு. மனித நாகரித்தையும், வளர்ச்சியையும் இன்றுவரை காவி வந்தது மொழியே.

எதிர்கால நிலைமை இன்னும் மோசமாக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. இருக்கிற பேச்சுத் தமிழைக் காப்பாற்றினாலே போதும் என்றாகிவிடும் நிலைமை இதனால் தானோ? என்னவோ? "மெல்லத் தமிழினச் சாகும்" என்றார் பாரதியார்.

எதிர்காலக் கல்வியில் தமிழின் இனிமை, இலக்கணம், உயர்ந்த கருத்துகள், தமிழின் சிறப்பு, தமிழில் உள்ள உயர்ந்த விழுமியங்கள் கற்பிக்கப்பட்டாலேயே தமிழ்மொழியின் உன்னதம் உணரப்படும்.

முத்தமிழ் விழாவின் மூலம் தமிழ்மொழியின் சிறப்புகள் வெளிக்கொணரப்பட்டு எல்லோருக்கும் ஆர்வமூட்டவேண்டும் என வாழ்த்துகிறேன்.

**கு.சிதம்பரநாதன்**
உபபீடாதிபதி (கல்வியும் தர மேம்பாடும்)
வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.

த - வல்லினம், மி - மெல்லினம், ல் - இடையினம்
தமிழின் சிறப்பே தன் பெயரிலேயே மூன்று இனத்தையும் கொண்டிருப்பது தான்

# முத்தமிழ் விழாவிற்கான ஆசியுரை



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் முத்தமிழ் விழா சிறப்புற அமைந்து அதற்கான மலர் ஒன்றினை வெளியிடும்வேளை ஆசியுரை ஒன்றை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வியியற் கல்லூரியில் பயிலும் முகிழ்நிலை ஆசிரியர்கள் பல்வேறுபட்ட திறன்களை இவ்விழா மூலம் பெறுகின்றனர் என்பதில் நிறைந்த நம்பிக்கை எனக்குண்டு.

குறிப்பாக கவிதை (மரபு/புதுசு), கட்டுரை, சிறுகதை, பாடல், குறு நாடகப் பிரதியாக்கம், அட்டைப்பட ஓவியம் என்பனவற்றில் அனைத்து முகிழ்நிலை ஆசிரியர்களும் ஏதோ ஒரு துறையிலேனும் பங்குபற்றி தமது ஆக்கங்களைப் போட்டி மூலம் தெரிவு செய்ய ஒத்துழைப்பு வழங்கினர். இதேபோல் பேச்சு, அறிவிப்பாளர் போட்டிகளிலும் பங்கு பற்றி போட்டியின் மூலம் தெரிவு செய்ய ஒத்துழைத்தனர்.

அநேகமான போட்டிகளுக்கு முகிழ்நிலை ஆசிரியர்களே நடுவர்களாக தொழிற்பட்டுள்ளமையானது பாடசாலைக்குச் சென்று பணி புரியும் காலங்களில் சகல போட்டிகளுக்கும் நடுவராகப் பணி புரியத்தேவைப்படும் அத்துறைகள் பற்றிய புள்ளியிடும் திட்டம், போட்டியை ஒழுங்கமைக்கும் ஆற்றல் என்பனவும் முகிழ்நிலை ஆசிரியர்களிடம் வளர்க்கப்படுகின்றன.

மேலும், முத்தமிழ் விழா, அமைப்பு, திட்டமிடல், பிரதம, சிறப்பு விருந்தினர்கள் தெரிவு, அழைப்பு, நிகழ்ச்சிகளைப் தயாரிப்பு, மேடையேற்றல்..... எனவும் பல விடயங்களாயும் தெரிந்து கொண்டுள்ளனர்.

மொத்தத்தில், முத்தமிழ் விழா ஒரு சிறந்த பயிற்சியாக அமைந்துள்ளது என்பதோடு, அவர்களது ஆற்றல்களை வெளிக்கொண்டுவரும் நல்ல நிகழ்வாகவும் காணப்படுவதால் முத்தமிழ் விழாவும் சிறப்பாக நடைபெறவேண்டும் என ஆசிகூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி

**ந.பார்த்தியன்**
தமிழ்மன்ற போஷகர்.

"இருந்தமிழே உன்னால் இருந்தேன்
"இமையோர் விருந்தமுதம் என்றாலும் வேண்டாம்" - பாரதிதாசன்
தமிழோடு இசைபாட மறந்தறியேன்" - நாவுக்கரச நாயனார்

# தலைவர் உரை



**வ**வுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் தலைவராக இருந்து முதன் முதலில் மலர் ஒன்றிற்கு தலைமை உரை வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன். மேலும் எமது தமிழ் மன்றமானது கல்லூரியில் வருடா வருடம் இயங்கி வருகின்றது. இதற்கு ஆதாரமாக எமது மன்றத்தினால் கவிஞன் இ.முருகையனின் நினைவுப் பேருரை ஒன்று இளைஞர் கழகத்தினரின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டதுடன் கலை நிகழ்வுகளும் நடாத்தப்பட்டது. எமது மாணவ ஆசிரியர்களின் உள்ளார்ந்த எழுத்தாற்றல்களையும், சுய ஆக்கத்திறனையும் வெளிப்படையான திறமைகளையும் மற்றும் இணைப்பாட விதான் செயற்பாடுகளையும் ஊக்குவிக்கும் பொருட்டு கவிதை, கட்டுரை, சிறுகதை, பேச்சு, பாடலாக்கம், குறுநாடகம், சித்திரம், அறிவிப்பாளர் என்று தமிழ் மொழித்திறன் போட்டி ஒன்றினை நடாத்தி அதில் தெரிவாகிய மாணவ ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கி அவர்களது ஆற்றல் மேலும் வளர்க்க வழிபடுத்தினோம். இவ்வாறு எமது மன்றம் சிறப்பாக இயங்கி வருகிறது என்பது எமது கல்லூரி சமூகத்தையே பெருமைகொள்ளச் செய்கிறது.

இனிவரும் காலங்களிலும் மன்றத்தினைப் பொறுப்பேற்று நடத்துபவர்கள் சிறப்பான முறையில் பாடசாலை மட்டத்திலான தமிழ்த் திறன் போட்டிகளை நடத்தி மாணவர்களின் திறமைகளை பாராட்டி சான்றிதழ் வழங்க வேண்டும். இதனை எமது மன்றத்தினால் திட்டமிட்டிருந்தோம். ஆனால் அதனை நடத்த இயலவில்லை இனிவரும் மன்றங்கள் கவனத்திற்கொள்ள வேண்டும் மற்றும் சில மாணவ ஆசிரியர்கள் மன்ற செயற்பாடுகளில் ஈடுபடாது ஒதுங்கி இருக்கிறார்கள். அவ்வாறான மாணவர்களை இனங்கண்டு அவர்களின் திறமைகளையும் வளர்க்க வேண்டும். எனவே எமது கல்லூ ரி மன்றச் செயற்பாடுகளுக்கு பேருதவியாயிருந்த பீடாதிபதி, மாணவ ஆசிரியர்களின் ஆற்றல்களை வளர்க்க வேண்டும் என்று ஒரே குறியாக இருந்த போஷகர், சகலவிதமான ஒத்துழைப்புகளையும் வழங்கிவரும் ஆசிரிய கல்வியியலாளர்கள் ஆகியோரைப் பயன்படுத்தி எதிர்காலத்தில் மன்றத்தை வளர்க்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி...

**சு.பிரதீபன்**

ஆரம்பப் பிரிவு (2 ஆம் வருடம்)

"இனிமையும் நேர்மையும் தமிழெனல் ஆகும்"
என்கிறது பிங்கல நிகண்டு
"தனது கல்லறையில் இவன் ஒரு தமிழ் மாணவன்
என்று பொறிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்" போப் பாதிரியார்.

# செயலாளரின் சிந்தனையிலிருந்து...



**வ**வுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் சிறப்பாக இயங்கி வரும் மன்றங்களில் தமிழ் மன்றமும் ஒன்றாகும். அந்த வகையில் தமிழ் மன்றத்தினரால் வருடா வருடம் நடாத்தப்படுகின்ற முத்தமிழ் விழாவினை இவ்வருடமும் நடாத்தி முத்தமிழ் விழா சிறப்புமலர் ஒன்றினை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம். அந்தவகையில் தமிழ்மன்றத்தின் செயலாளர் என்ற வகையில் சில கருத்துக்களை வழங்குகின்றேன்.

மன்றப் பொறுப்பை எமது நிர்வாகக் குழுவானது கடந்த 27.05.2011 அன்று பொறுப்பேற்றதில் இருந்து இதுவரை சிறப்பாக நடாத்தி வந்திருக்கின்றது. அந்த வகையில் பல்வேறுபட்ட போட்டி நிகழ்வுகளை நடாத்தியதோடு மன்றத்தின் 2வது, 4வது 5வது புதன் கிழமைகளில் மன்றச் செயற்பாடுகளையும் நாம் திறம்பட நடத்தியுள்ளோம். இதன்போது பல்வேறுபட்ட இன்னல்கள், விமர்சனங்களை சந்தித்தாலும் அவையும் படிக்கற்களாக எம்மை உயர்த்தியிருக்கின்றன என்று கூறலாம்.

எமது மன்றத்தினரால் நடாத்தப்பட்ட பேச்சு, கவிதை, கட்டுரை, குறுநாடகம், பாடலாக்கம், ஓவியம், சிறுகதை அறிவிப்பாளர் ஆகிய போட்டிகளுக்கு நடுவர்களாக கலந்து சிறப்பித்த எமது கல்லூரியின் ஆசிரிய கல்வியியலாளர்களான திரு.பொ.சத்தியநாதன், திருமதி.நெலோமி அன்ரனிகுருப் திரு.இளங்குமரன் ஆகியோருக்கும் அழகியல், ஆங்கில, சமூகவியல், கலாச்சார மன்ற தலைவர் மற்றும் மன்றம் சார்ந்தோருக்கும் போட்டிகளில் பங்குபற்றிய அனைத்து மாணவ ஆசிரியர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் எமது தமிழ்மன்ற நிகழ்வுகளை நாம் சிறப்புற நடாத்துவதற்கு எமக்கு பூரண ஒத்துழைப்பையும் ஊக்கத்தையும் வழங்கிய மன்றப் போஷகர் திரு.ந.பார்த்தீபன் அவர்களுக்கும் மன்ற ஆலோசகர் திரு.பொ. சத்தியநாதன் அவர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்வதுடன் முத்தமிழ் விழாவுக்கான அனுமதியை வழங்கி ஒத்துழைப்பு வழங்கிய பீடாதிபதி மற்றும் ஏனைய கல்லூரிச் சமூகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து இனிவரும் காலங்களில் எமது கல்லூரி மன்றமானது மேலும் சிறப்புற இயங்கி கல்லூரிக்கும் தமிழுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என இறைவனை வேண்டிக்கொள்கின்றேன்.

நன்றி....

**த.பிரஜாபதி**
ஆரம்பப் பிரிவு 2 ஆம் வருடம்.

# இதழாசிரியர் உரை.



வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் தமிழ் மன்றமானது முத்தமிழ் விழாவினை நடாத்தும் முகமாக முத்தமிழ் விழா சிறப்பு மலரினை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மலரானது முத்தமிழ் விழாவினை சிறப்பிக்கும் முகமாக 2ம் வருட ஆசிரிய மாணவர்களிடையே நடத்தப்பட்ட எழுத்தாக்கங்களையும் போட்டிமுடிவுகளையும் தாங்கி வருகின்றது.

அத்துடன் பீடாதிபதி, உப்பீடாதிபதிகள், மன்றத்தின் போசகர் போன்றோரின் ஆசிச்செய்திகளையும், தலைவரின் செய்தி, செயலாளரின் செய்தி என்பவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

தமிழின் மகத்துவத்தையும், தொன்மையையும் இக்கால சந்ததியினரிடம் பதிய வைக்கும் நோக்கிலும் காலத்தால் முந்திய தமிழை காலமெல்லாம் காக்கும் தமிழர்களாக எம் சமூகத்தை கட்டியெழுப்பும் நோக்கிலும் எமது தமிழ் மன்றம் தன் நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது.

இம் முத்தமிழ் விழா சிறப்பு மலரிற்கு ஆசிச் செய்திகளை வழங்கிய பீடாதிபதி, உபபீடாதிபதிகள், போசகர் திரு.ந.பார்த்தீபன் ஆகியோருக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் எழுத்தாக்கங்களை மதிப்பிட்டு புள்ளி வழங்கிய ஆசிரிய கல்வியியலாளர்களுக்கும். தமிழ்மணி திரு.அகளங்கன் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். மற்றும் பேச்சு, அறிவிப்பாளர், ஓவியப் போட்டிகளுக்கு மத்தியஸ்தம் செய்து தந்த ஆசிரிய கல்வியியலாளர்களுக்கும், மன்றங்களின் தலைவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அட்டைப்பட ஓவியத்தை, ஓவியப் போட்டியை நடத்தி முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்ட ஓவியத்தை கௌரவித்து அட்டைப்பட ஓவியமாக அலங்கரித்துள்ளோம்.

எமது வழமையான சொற்பாடுகளில் முத்தமிழ் விழாவுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கும் பிரதம அதிதியின் தமிழியல் தொடர்பான கட்டுரை ஒன்றைப் பிரசுரிக்கும் வழக்கத்தை இம்மலரிலும் செய்துள்ளோம்.

நன்றி

**த.சாந்தகுமார்**
கிறிஸ்தவப்பிரிவு 2ஆம் வருடம்.

# தமிழ்ச் சொல்லிலக்கணத் திணைப்பகுப்பின் அடிப்படை

க.இரகுபரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், கலை கலாசார பீடம்
தென்கிழக்கு பழ்கலைக்கழகம்

சொற்களைத் திணை அடிப்படையில், அல்லது பால் அடிப்படையில், அல்லது இரண்டின் அடிப்படையிலுமே பகுத்து நோக்குவது பெரும்பாலும் உலக மொழிகள் பலவற்றிலும் காணப்படுவதோர் இலக்கணமரபு. தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் திணை, பால் என்பன அதன் உயிரான அம்சங்களாக விளங்குகின்றன. தமிழின் இலக்கண நூல்களும் அந்த அம்சங்களை இனங்கண்டு பகுத்துக் கூறுவதில் மிகுந்த கவனம் காட்டியுள்ளன.

எந்த ஒரு விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வும் ஏதேனும் ஓர் அடிப்படையை வைத்துக்கொண்டே மேற்கொள்ளப்படும். அவ்வகையில் தமிழின் திணைப்பகுப்பு எத்தகையது? தமிழிலக்கண நூல்கள் அதனை எத்தகைய கோட்பாட்டின் அடிப்படையில் வகுத்துக் கூறின? என்று காண்பதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கம். அதற்கு முன்பாக பிரதான மொழிகள் சிலவற்றின் பாற்பகுப்போடு திராவிட மொழிக் குடும்பத்தின் பாற்பகுப்பை ஒப்பியலாய்வின் அடிப்படையில் நோக்கி முன்வைக்கப்பட்ட கருத்துக்களைச் சுருக்கமாகவேனும் அறிதல் பயனுடையது.

"இந்தோ ஐரோப்பிய மொழிகளில் ஆண்பால், பெண்பால், அலிப்பால் என முப்பால் உண்டு. அவ்வாறு பகுத்ததற்குக் காரணம் இன்னதென அறியோம். முன்னோர் வழங்கிய முறையே காரணமின்றிக் கடைப்பிடிக்கப்படுகிறது. திராவிட மொழிகளில் பொருட்களின் இயற்கையான தன்மை கண்டே பால் வகுக்கப்படுகின்றது. ஆனால் வடமொழி முதலானவற்றில் உயிரில் பொருட்களும் நுண்கருத்துக்களும் ஆண்பால் எனவும் பெண்பால் எனவும் பகுக்கப்படுகின்றன. கைகள் பெண்பால். கைவிரல்கள் ஆண்பால், இத்தகைய பொருளற்ற அறிவுக்கு ஒவ்வாத பாற்பகுப்பு விந்தையாகக் காணப்படும். ஆண் எனவும் பெண் எனவும் கூறமுடியாத பொருள்களை உணர்த்தும் சொற்கள் ஆண்பால் சொல் எனவும் பெண்பால் சொல் எனவும் வழங்கப்பட்டு ஆண்பால் உருபும் பெண்பால் உருபும் சேர்க்கப்படுதலும் அவன், அவள் எனச் சுட்ட இயைதலும் இந்தோ ஐரோப்பிய மொழிகளில் காண்பன. பழைய ஆங்கிலத்தில் 'பல்' ஆண்பாலாகவும் 'பாவம்' பெண்பாலாகவும் மனைவி, மங்கை என்பன

அலிப்பாலெனவும் கருதப்பட்டு வந்தமை வியப்பாகவே உள்ளது. ஆனால் இன்றுள்ள ஆங்கிலத்தில் அம்முறை அழிந்து இயற்கைத் திணை முறை ஏற்பட்டுள்ளது. பிரெஞ்சு, ஜெர்மன் முதலிய மொழிகளில் பழைய முறைப்படியே காரணமற்ற பால்பாகுபாடு உள்ளது. இம்மொழிகளைக் கற்போர் காரணமற்ற பால் பாகுபாட்டு முறைப்படி சொற்களை நெட்டுருச் செய்து இடர்படுதல் உள்ளது."

இங்கு திராவிடமொழிக் குடும்பத்துப் பாற்பகுப்பின் சிறப்பம்சங்களாகக் குறிப்பிடப்பட்டவை யாவும் பெரும்பாலும் அக்குடும்பத்தின் முதன்மை மொழியாகக் கருதப்படும் தமிழ்மொழியின் அடிப்படையிலேயே முன்வைக்கப்பட்டுள்ளன. மேற்படி மேற்கோள் தமிழின் திணை, பாற் பகுப்பை ஒரு தலையாகப் பாராட்டியே பேசுகின்றது என்பது வெளிப்படை. ஆயினும் தமிழின் திணை, பாற்பகுப்பு விடயத்தில் சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுவோரும் உளர். அவற்றுள் முக்கிய குறைபாடு என்னவெனில் தமிழிலக்கணம் திணைப் பகுப்பு விடயத்தில் சமய சித்தாந்தங்களின் செல்வாக்கிற்கு ஆளாகியுள்ளது என்பதாகும்.

*"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே*
*அ:றிணை யென்மனா ரவரல பிறவே*
*யாயிரு திணையி னிசைக்குமன சொல்லே"*

என்று தமிழ்மொழியிலே அமைந்துள்ள திணைப்பாகுபாட்டினைத் தொல்காப்பியர் எடுத்துக்கூறியுள்ளார்.

"பகுத்தறியும் மனத்திணையுடைய மாந்தரே உயிர்களுள் சிறந்தவர்களாகச் சமணமதம் கருதுகிறது. இந்தவகையில் நரகர், தேவர் கூட மக்களுக்கு இணையாகார். 'மாற்றது' எனப்படும் 'சம்சார ஜீவன்' நல்வினை தீவினைகளிற் கட்டுண்டு அவ்வினைப் பயன்களைத் துய்ப்பதற்கே நரகத்திலும் சுவர்க்கத்திலும் பிறப்பதும் இறப்பதுமாக உழன்று திரியும் தன்மையுள்ளது. விலங்கு, நரகர், தேவர் எனும் பிறப்புக்களில் பிறந்த உயிர்கள் மட்டும் வீடுபேறடையும் வாய்ப்பு உடையன. ஆகவே சமண சமயத்திலே மக்கட் சுட்டினர் பெறும் சிறப்பு அவர்களுக்குரிய ஆறாவது அறிவும் வீடுபேறடையும் வாய்ப்புமாகும். இச்சமயக் கோட்பாட்டுக்கும் தமிழ்மொழியின் திணைப் பாகுபாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தொல்காப்பியர் வருணன், மாயோன், வேந்தன், சேயோன் என்று கடவுளர்க்கு 'ன்':கானொற்றுக் கொடுத்துக் குறிப்பிட்டுள்ளார். எனினும் அவர்களை உயர்திணைக்குள் அடக்காது விட்டதன் காரணம் என்ன? சமண சமயமே இதற்குக் காரணம் எனலாம்."

"சமண சமயத் தத்துவத்தைவிட வேறு பல தத்துவங்களும்

தமிழ் நாட்டிலே செல்வாக்குப் பெற்றிருந்தன. இதனால் சமண சமயச் செல்வாக்கு மாத்திரம் தமிழ் இலக்கணக் கோட்பாடுகள் யாவற்றையும் கட்டுப்படுத்தின எனக் கூறமுடியாது. சமண சமயத் தத்துவ அடிப்படையிலே தொல்காப்பியரால் உயர்திணை என்பது மக்கட் சுட்டே என வகுக்கப்பட்ட இலக்கணக் கோட்பாடுகள் நன்னூலாராலே மாற்றியமைக்கப்படுகிறது.

*"மக்க டேவர் நரக ருயர்திணை*
*மற்றுயி ருள்ளவு மில்லவு ம:றிணை"*

என்பது நன்னூலார் சூத்திரம். தேவரும் நரகரும் மக்களைப் போன்று ஆறறிவுடையவரென்றும் வீடுபேற்றுக்குரியவரென்றும் பிற சமய தத்துவங்கள் கருதிய காரணத்தினால் நன்னூலார் இவ்வாறு சூத்திரஞ் செய்யவேண்டி ஏற்பட்டது."

தொல்காப்பியர் திணைப்பகுப்பில் மக்களையே உயர்திணையாகக் கொண்டார். நன்னூலாரே மக்களோடு தேவர், நரகர் ஆகியோரையும் உயர்திணையிற் சேர்த்துக் கொண்டார் என்ற முடிவின் அடிப்படையிலேயே மேற்படி விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஏறக்குறைய இதற்கு நிகரானதொரு கருத்தையே பேராசிரியர் வேலுப்பிள்ளையும் கொண்டுள்ளார்.

ஒரு மொழியின் அமைப்பு சமயம், அரசியல் முதலான பல்வேறு சமூக காரணிகளால் நிருணயிக்கப்பட்டதாகலாம். ஒரு மக்கட் குழுவின் மனநிலையில் அக்காரணிகள் ஏற்படுத்துகின்ற தாக்கமானது அம்மக்கட்குழு பேசும் மொழியின் போக்கைத் தீர்மானிக்கலாம். ஆனால் அக்காரணிகள் நேரடியாக அம்மொழியின் இலக்கணத்தைத் தீர்மானிக்க இயலாது. இலக்கணத்தைத் தீர்மானிப்பது அம்மொழியேயாம். ஒரு மொழியின் இலக்கணம் என்பது அந்த மொழியை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டதாய் இருத்தல் வேண்டும் என்பதே இங்கு வலியுறுத்தப்பெறும் உண்மையாகும். மாறாக மொழியின் போக்கை நோக்காது இலக்கணவாசிரியனொருவன் தான் சார்ந்த சமய, அரசியல் சித்தாந்தங்களுக்கேற்ப இலக்கணமெழுத முனைவானாயின் அவ்விலக்கணம் அம்மொழியின் உண்மை இயல்பை உணர்த்துவதாய் அமையாது.

தமிழுக்கு அமைந்த இலக்கண நூல்களாக இன்று எமக்குக் கிடைப்பவற்றுள் தொல்காப்பியமே தொன்மையானது. தமிழ்மொழியின் இலக்கணக் கூறுகள் பெரும்பாலானவற்றை இனங்கண்டு கூறி

பிற்காலத்தெழுந்த தமிழிலக்கண நூல்களுக்கான அடிப்படையை அத்தொல்காப்பியம் ஓரளவு முழுமையாகவே இட்டுவிட்டது. தொல்காப்பியத்தின் காலம் பற்றிய கருத்து முரண்பாடுகள் இருப்பினும் அது சங்க இலக்கியங்களுக்குப் பிற்பட்டது என்ற கருத்தே பெரும்பான்மையும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. தொல்காப்பியமானது வழக்கும் செய்யுளும் நோக்கி எழுதப்பட்டது என்கிறது அதன் சிறப்புப் பாயிரம். ஆகவே, அது சங்க இலக்கிய வழக்கையும் அவ்விலக்கியங்கள் புலப்படுத்தும் உலக வழக்கையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பது வெளிப்படை. சங்க இலக்கியங்களில் பரவலாக முக்கட்செல்வன், முருகன், கொற்றவை, திருமால் முதலான தெய்வங்கள் உயர்திணையிலே சுட்டப்படுகின்றன. தொல்காப்பியம் சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டது என்று வாதத்திற்காக வைத்துக்கொண்டாலும் அதிர்ஷ்டவசமாக தெய்வங்களை உயர்திணை வாய்ப்பாட்டில் தொல்காப்பியரே சுட்டுவதை அதன் பொருளதிகாரத்தில் ஆங்காங்கே காண்கிறோம். அவ்வாறான நிலையில் தொல்காப்பியர் தெய்வங்களை விடுத்து மக்களை மாத்திரம் உயர்திணையாகக் கொண்டார் என்பது ஆராய்ச்சிக்குரிய விடயமாகும். திணைப்பாகுபாடு பற்றிக் கூறும் தொல்காப்பிய நூற்பார்வையை மீண்டும் நோக்குவோம்.

***"உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே***
***அஃறிணை என்மனார் அவரல பிறவே***
***ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே"***

இந்நூற்பாவே ஆராய்ச்சியாளர்களை 'தொல்காப்பியர் மக்களை மாத்திரமே உயர்திணையாகக் கொண்டார்' என எண்ண வைத்தது. இந்நூற்பாவிற்கு சேனாவரையர் எழுதிய உரையானது விடயத்தின் உண்மையை உணர்த்த வல்லதாய் உள்ளது.

"மக்களென்றுகருதப்படும்பொருளைஆசிரியர்உயர்திணையென்று சொல்லுவர். மக்களென்று கருதப்படாத பிறபொருளை அஃறிணையென்று சொல்வர். அவ்விருதிணை மேலுஞ் சொற்கணிகமும் என்றவாறு"

தொல்காப்பியரின் திணைப்பகுப்பில் "மக்கள் மக்களல்லாத பிற" என்று பாகுபாடு செய்யப்படவில்லை. 'மக்கள் என்று கருதப்படும் பொருள் மக்களென்று கருதப்படாத பிற பொருள்' என்றே பாகுபாடு செய்யப்படுகின்றது. ஆகவே பிறப்பினால் அன்றி மொழியைப் பேசுவோன் எண்ணத்தில் மக்கள் என்று கருதப்பட்ட எப்பொருளும் உயர்திணை வாய்ப்பாட்டைப் பெறும். அது மாத்திரமல்ல, மொழியைப் பேசுவோன்

எண்ணத்தில் மக்கள் என்று எண்ணப்படாத எப்பொருளும் பிறப்பினால் மனிதனாகவே இருப்பினும் அஃறிணை வாய்ப்பாட்டையே பெறும். சேனாவரையரின் வார்த்தையிற் கூறுவதாயின்,

***"ஈண்டு மக்களென்றது மக்களெனு முணர்வை. எனவே, மக்களேயாயினும் மக்களென்று சுட்டாது பொருளென்று சுட்டியவழி உயர்திணை யெனப்படா வென்பதாம்"***

தமிழ்மொழி வழக்கைப் பொறுத்தவரையில் இத்தன்மை இன்றுவரை நடைமுறையில் உள்ளதே. தன்மகன் கல்வியிலே கவனமின்றி, ஒழுக்கமின்றித் திரிவதைக் கண்ட ஒருவன் "இது திருந்தாது" என்று அஃறிணை வாய்ப்பாட்டில் திட்டுவதை ஏன் வெளிப்படையாகவே 'எருமை உருப்படாது' என்று விலங்காக நோக்குவதைக் காண்கிறோம். ஒருவன் தன் வளர்ப்புப் பிராணியை (அஃறிணையை) அன்பு மிகுதியால் 'அவன், அவள்' எனச் சுட்டுவதையும் காண்கின்றோம்.

இங்கு நாம் உணரவேண்டிய முக்கியமான உண்மை தமிழிலக்கணம் கூறும் திணைப்பகுப்பு என்பது மொழிக்கே அன்றி பொருளுக்கு அல்ல என்பதாம். அப்பகுப்பு உயிருள்ளவை - உயிரற்றவை. ஆண் - பெண், அசைவன - அசையாதன என்பன போல இயற்கையானதொரு பகுப்பு அல்ல. செயற்கையானது. செயற்கையானது என்னும்போது இலக்கண நூலார் செயற்கையாக வகுத்தது என்று பொருளாகாது. தமிழ்மொழியை ஆராய்ந்தபோது அதன் சொற்கள் இயல்பாகவே இருபெரும் பகுதியாகப் பகுக்கத்தக்க நிலையில் விளங்கும் தன்மை கண்டு அந்த இரு பகுதிக்கும் செயற்கையாக - ஆனால் பொருத்தமுற - இட்டு வழங்கப்பட்ட குறிகளே (கலைச்சொற்களே) உயர்திணை, அஃறிணை என்னும் இரண்டுமாம். தமிழின் சொற்களஞ்சியம் இருபெரும் பகுதியாகப் பகுக்கத்தக்க நிலையில் அந்த இரு பகுதிக்கும் அக்குறிகளை இட்டவர்கள் தொல்லிலக்கண ஆசிரியர்கள். ஆனால் அவ்வாறு பகுக்கத்தக்க தன்மையானது தமிழ்மொழியைக் காலாதி காலமாகப் பேசிவந்த மக்கட் குழுமத்தினது சிந்தனைத் தெளிவின் விளைவாக இயல்பாகவே அமைந்ததாகும். இலக்கணவாசிரியர்களாற் செயற்கையாக மேற்கொள்ளப்பட்டதன்று. அந்த இயல்பான பாகுபாடு யாதெனில் ஒரு பகுதிச் சொற்கள் அவன், அவள், அவர் எனச் சுட்டி வந்தான், வந்தாள், வந்தனர் என்றவாறு வினை முடிவுகொண்டு மக்களை - மக்கள் போல நடையுடைய பாவனையுடையோராய்க் கருதப்படுவோரைக் குறித்து நிற்க, மறுபகுதிச் சொற்கள் அவரல்லாத பிறவற்றை அது, அவை எனச் சுட்டி வந்தது, வந்தன என்றவாறு வினைமுடிவு கொள்ள இடங்கொடுத்து நிற்பதேயாம்.

"மக்கட்பிறப்பின் உயர்வுக்குக் காரணமான பகுத்தறிவின் உண்மையும் இன்மையுமே திராவிட மொழிகளின் பால் திணை பாகுபாட்டுக்கு அடிப்படை. ஏனைய மொழிகளில் உள்ளவாறு காரணமற்ற முறை இங்கு இல்லை எளியதொரு காரணத்தால் அமைந்த பாகுபாடும் இல்லை, உயர்ந்ததொரு காரணம் கொண்டே திணை பால் பகுக்கப்பட்டுள்ளன. உண்மையாக நோக்கின் இத்தகைய பாகுபாடே ஒரு மொழியை வழங்குவோருக்கு வேண்டுவது என்பது விளங்கும் இம்மொழி பேசிய மக்கள் அறிவுத்துறையில் எவ்வளவு முன்னேற்றம் உற்றிருந்தனர் என்பது உணர்ந்து வியத்தற்குரியதே" (வரதராசன், ப. 124)

பகுத்தறிவு காரணமாக மக்களை உயர்வாகக் கொண்ட சமூகம், தெய்வம் முதலானவற்றையும் மனிதநிலைப்படுத்தி நோக்குகின்ற வேளையில் அம்மனிதனுக்குரிய வாய்ப்பாட்டாலேயே வழங்கிற்று. அதன் வெளிப்பாடே முக்கட்செல்வன், முருகன், தேவன், தேவி முதலான தெய்வம் சுட்டும் உயர்திணை வாய்ப்பாட்டுச் சொற்கள். ஆயினும் தெய்வத்தை மனித நிலைப்படுத்தி நோக்கும் தன்மை எல்லா வேளைகளிலும் காணப்படுவதொன்றன்று. சிலவேளைகளில் தெய்வம் என்பது ஒரு சக்தி என்ற அளவில் உணர்ந்து கொள்ளப்படுதலும் உண்டு. அந்நிலையில் அது அஃறிணையாகவே அமைந்து விடுகிறது.

தெய்வம் உயர்திணையாகும்போது அது ஆணா பெண்ணா என்பதிலும் சிக்கல் உண்டு. ஒரு நிலையில் ஆணாகவும் இன்னொரு நிலையில் பெண்ணாகவும் நோக்கும் தன்மை உண்டு. அஃறிணையாக இருந்த தெய்வம் மனித நிலைப்படுத்தி நோக்கும்போது ஆணாக நோக்கின் ஆண்பால் விகுதியையும் பெண்ணாக நோக்கின் பெண்பால் விகுதியையும் பெறுகிறது. தேவன் அருளினான், தேவி அருளினாள் என்றவாறு. அச்சொல்லுக்கென்று நிலையான ஒரு விகுதி இல்லை. சொல்வோன் கருத்துக்கேற்ற விகுதி பெறும். இச்சிக்கல் கருத்துப் பொருளான தெய்வத்துக்கு மாத்திரம் உரியதல்ல. காட்சிப் பொருளான மனிதசாதியுள் ஒரு சாரார் பற்றிய மொழி வழக்கிலும் உண்டு. ஆண்மை திரிந்து பெண் தன்மையுற்ற பேடரே அச்சிக்கலுக்கு உரியவர்கள். அவர்களைக் குறித்த சொற்களுக்கும் நிலையான விகுதி என்று ஒன்று இல்லை. பேசுவோன் கருத்துக்கேற்ப உயர்திணை விகுதியொன்றைப் பெறும் - பேடன் வந்தான், பேடி வந்தாள் என்றவாறு.

***"பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்***
***ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்***
***தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்***

***இவ்வென அறியும் அந்தம் தமக்கு இலவே
உயர்திணை மருங்கிற் பால் பிரிந்து
இசைக்கும்"***

***- (தொல். சொல். 04)***

தமிழிலக்கணத்தில் திணைபாற்பகுப்பு பொருளடிப்படையில் மேற்கொள்ளப் படுவதில்லை. சொல்லடிப் படையிலேயே மேற்கொள்ளப் படுகின்றது. அச்சொல்லின் தன்மையும் பொருளாலன்றி சொல்லானது உள்ளக்கருத்தாலேயே நிருணயிக்கப் படுகின்றது. அவ்வாறாக பேசுவோன் தெய்வத்தை மனித நிலைப்படுத்தி நோக்கும் உள்ளக்கருத்தின் காரணமாக தெய்வம் என்ற அஃறிணைப்பதம் உயர்திணை விகுதியேற்கின்றது என்பன மேற்படி நூற்பாவால் உணரத்தக்க உண்மைகள். இது காரணமாக "உயர்திணை யென்மனார் மக்கட்சுட்டே" என்பதற்கு சேனாவரையர் தரும் விளக்கத்தின் வன்மையை மேலும் நன்கு உணரக்கூடியதாகின்றது.

தமிழ்மொழி இலக்கணத்தில் உயர்திணை, அஃறிணை என்பன சொல்லமைப்பின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுவன என்பதே தொல்காப்பியர் கருத்து என்ற உண்மை இங்கு உணரப்பட்டது. உணரப்படவே தொல்காப்பியர் மக்கள் மாத்திரமே உயர்திணையுள் அடங்குவோர் என்று கருதினரல்லர் என்பதும் பெறப்படும். தொல்காப்பியர் மொழிநிலையில் மாத்திரமன்றிச் சித்தாந்த நிலையிலும் மக்களல்லாத வேறுசிலவற்றையும் உயர்திணையாகக் கருதினார் என்று கொள்ளவும் இடமுண்டு.

பொருளதிகாரம் மரபியலில் உயிர்களை ஓரறிவு முதல் ஆறறிவு வரை உடையனவாக வகுத்த தொல்காப்பியர், ஒவ்வோர் வகை உயிர்க்கும் இவ்விரு எடுத்துக்காட்டுக்களைத் தந்து 'அவை போன்றன பிறவும் உள' என்பார்.

***உதாரணம்:***
***'புல்லும் மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'***

**- (தொல். பொரு. மர. 28)**

இவ்வாறே ஈரறிவுயிர், மூவறிவுயிர் முதலானவற்றுக்கும் சூத்திரம் செய்தார் தொல்காப்பியர் அவற்றுள் ஆறறிவுயிர் பற்றிக் கூறும் நூற்பா வருமாறு:

***'மக்கள் தாமே ஆறறி வுயிரே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே'*** -(தொல். பொரு. மர. 33)

ஒவ்வோர் வகை உயிர்க்கும் உதாரணங்களைக் கூறிவந்த தொல்காப்பியர் ஆறறிவுயிர்க்கு மக்களை மாத்திரம் எடுத்துக் காட்டினார். கையோடே ஏனைய உயிர்வகைக்குக் கூறிவந்தவாறே "பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" என்றார். ஆதலால் தொல்காப்பியர் மக்களைப் போலவே ஆறாவது அறிவாகிய மனவுணர்வினை (பகுத்தறிவினை) உடைய உயிர்வகை பிறவும் உள எனக் கொண்டார் என்பது தெளிவு.

பிறவும் உளவாயின் உயிர்வகைக்கு இவ்விரு எடுத்துக்காட்டுக்களைக் காட்டியது போல இதற்கும் காட்டியிருக்கலாமே என்ற கேள்வி எழலாம். எடுத்துக் காட்டுக்களின் நோக்கம் தெரிந்தது கொண்டு தெரியாதவற்றை விளக்குதலே. ஆகையால் எடுத்துக்காட்டுக்கள் எப்போதும் மக்களால் நன்கு அறியப்பட்டனவாக இருத்தல் வேண்டும். ஆறறிவுயிர்க்குத் தொல்காப்பியர் மக்களை மாத்திரம் எடுத்துக் காட்டாகக் கொண்டதன் காரணம் மக்களே காட்சிப் பொருளாக மக்களால் நன்கு அறியப்பட்ட ஆறறிவு உயிர்வகை என்பதாகும். "பிறவும் உளவே" என அவராற் குறிப்பிடப்பட்ட ஏனையன கருத்துப் பொருள்களான தேவர், நரகர் முதலான உயர் குழுமங்களே என்பதை உய்த்துணர்தல் வேண்டும்.

மேற்படி நூற்பாவுக்கு இளம்பூரணர் எழுதிய உரை வருமாறு:

"மக்கள் ஆறறிவுயிரெனப் படுவர், அக்கிளைப் பிறப்பு பிறவுமுள என்றவாறு. பிறவாவன தேவர் அசுரர் இயக்கர் முதலாயினார் பிறப்புக்கள்"

கீழ்க்காண்பது அந்நூற்பாவுக்குப் பேராசிரியர் செய்த வியாக்கியானம்.

> "........................
> *கிளையெனப் படுவார் தேவரும் தானவரும்*
> *முதலாயினார். பிறப்பென்றதனால், குரங்கு*
> *முதலாகிய விலங்கினுள் அறிவுடையனவெனப்*
> *படும் மனவுணர்வுடையன உளவாயின்*
> *அவையும் ஆண்டு ஆறறிவுயிரா யடங்கு*
> *மென்பது. தாமே யெனப் பிரித்துக் கூறின*
> *மையான் நல்லறிவுடையா ரென்றற்குச்*
> *சிறந்தாரென்பதுங் கொள்க"*

தொல்காப்பியம் இளம்பூரணர் உரைப்பிரதிகளில் இந்நூற்பாவை அடுத்து,

'ஒருசார் விலங்கும் உளவென மொழிப'

என்னும் மேலதிக நூற்பா ஒன்று உள்ளமை அறிய வேண்டியது (மனுவின்

நெறி புக்கவேல் அவ்விலங்கும் பத்தேளிரே' என்ற கம்பன் கூற்றும் கருதத்தக்கதே)

ஆகவே, மக்கட் பிறப்பல்லாத (தேவர் உள்ளிட்ட) பிற உயிர்களையும் தொல்காப்பியர் சித்தாந்தநிலை, மொழிநிலை எனும் இரண்டிலும் உயர்திணையாகக் கொண்டார் என்பது தெளிவு.

ஆறறிவுயிர் பற்றிய தொல்காப்பியர் கருத்தை நோக்கிய நிலையில் ஐயறிவுயிர் பற்றிய அவர்தம் கருத்தையும் அறிதல் நன்று.

'மாவும் மாக்களும் ஐயறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே" (தொல். பொரு. மர. 32)

இந்நூற்பாவுக்கான பேராசிரியர் உரை வருமாறு:

"இஃது ஐயறிவுடையன கூறுகின்றது. ஐயறிவுடையன விலங்கும் அவைபோல்வன ஒருசார் மானிடங்களுமாம். அக்கிளைப்பிறப்பு பிறவும் உள"

பிறப்பால் மக்களாயினும் அறிவுக் குறைவால் மக்களாகக் கருதப்படாது மாக்களாகக் கருதப்படும் நிலையில் மனிதப் பிறப்பும் அஃறிணையாகி விடுகின்றது.

"தக்க இன்ன தகாதன இன்னவென்று
ஒக்க உன்னலராயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே" (கம்ப. கிட்கிந்தா. வாலிவதை.)

என்பது கம்பன் கருத்து. அறிவுக்குறைபாடுடைய மனிதரை வள்ளுவரும் "மாக்கள்" என்றே சுட்டினார்.

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்" (குறள்)

அறிவு முதிராத சிறுவரையும் 'மாக்கள்' என்பது பண்டைத் தமிழ் வழக்கு. இன்றும் குழந்தையை அஃறிணை வாய்ப்பாட்டில்தானே சுட்டுகிறோம். பிறப்பால் மக்களாயினும் மக்களென்று கருதப்பட முடியாத நிலையில் - கருதாத நிலையில் - மக்களையும் அஃறிணையாகவே தொல்காப்பியர் கொண்டார் என்பது இவற்றால் உணரப்படும் உண்மை. இவ்வுண்மை உணரப்படவே தொல்காப்பியரின் திணைப்பாகுபாடானது

மொழிநிலை, உயிர்களின் அறிவு பற்றிய சித்தாந்த நிலை எனும் இரண்டோடும் முரண்படுவதாய் இல்லை என்பது பெறப்படும்.

"வானவர் நரகர் விலங்குபுள்
ஆதி செவியறிவோடு ஐயறிவு உயிரே" நன்னூல்

உயிர்களின் உயர்வு - தாழ்வு பற்றிய நன்னூலாரின் சித்தாந்தத்தில் மக்களுயிர்க்கு என்று தனிச்சிறப்பு எதுவும் இல்லை. தேவர், நரகருக்கு மாத்திரமன்றி விலங்குகள் பறவைகளுக்குக் கூட மேற்படாத ஒரு நிலையிலேயே மக்களை அவர் கருதினார். உறுதியாகச் சமணர் என்று அறியப்பட்ட நன்னூலாரின் உயிர்கள் பற்றிய சித்தாந்தம் இவ்வாறிருக்க "தேவர் நரகர் கூட மக்களுக்கு இணையாகார், மக்களே வீடு பேற்றுக்குரியவர். ஆதலால் மக்களுயிரே உயர்ந்தது" என்ற சமண சித்தாந்தத்தின் அடிப்படையிலேயே தமிழின் உயர்திணை, அஃறிணைப் பாகுபாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று கொள்வது பொருத்தமானதாகாது. அக்கருத்தின் பொருந்தாமைக்கு வலுவான பிறிதோர் காரணமும் உண்டு. மக்கட்பிறவியிற்கூட பெண்பாலார் வீடுபேறடைய முடியாது என்பதே சமண சித்தாந்தமாயிருக்க, தமிழ்மொழியின் திணைப்பாகுபாட்டில் பெண்களும் உயர்திணையாகவே கொள்ளப்படுகிறார்கள் என்பதே அக்காரணமாம்.

தமிழ்மொழியைப் பொறுத்தவரையில் வடமொழிப் புராண, இதிகாசக் கருத்துக்கள் உட்புகாத காலத்திலாயினும் சரி, அன்றேல் அவ்வழக்குகள் பெருமளவில் கலந்துவிட்ட பிற்காலத்திலாயினும் சரி, தொல்காப்பியரின் திணைப்பாகுபாடு மிகுந்த பொருத்தப்பாடு உடையதாய் அமைகிறது. மக்களெனக் கருதப்படுவோர் உயர்திணை, அல்லாதன வெல்லாம் உயர்வல்திணை என வகுத்த தொல்காப்பியரின் மொழி நிலைப்பட்ட பாகுபாட்டில் நன்னூலாரும் உடன்பாடுடையவரே. ஆயினும் அவர் தொல்காப்பியரின் எண்ணத்தை முழுமையாக விளங்கிக் கொண்டார் என்று கூறுவதற்கில்லை. 'மக்கட்சுட்டு' என்று தொல்காப்பியர் குறிப்பிட்டது தேவர் முதலானோரை என்று கருதி, அதை வெளிப்படையாகக் கூறவேண்டும் என்ற விருப்பினாலேயே நன்னூலார்.

***'மக்கள் தேவர் நரகர் உயர்திணை***
***மற்றுயி ருள்ளவும் அல்லவும் அஃறிணை'***

என்றவாறாகச் சூத்திரம் செய்தார். மக்கள், தேவர், நரகர் என்போர் முறையே, பூவுலகிலும் மேலுலகிலும் கீழுலகிலும் வாழும் உயர்நிலை உயிர்கள். இவற்றுள் பின்னிரண்டும் பௌராணிக இலக்கிய உலகின்

கற்பனை உயிர்கள். இம்மூவகை உயிர்களும்தான் இலக்கியங்களில் வழங்கப்படுவனவல்ல. அசுரர், இராக்கதர் என்றெல்லாம் உயர்நிலையில் சுட்டப்படும் பிற உயிர்களும் உண்டு. அன்றியும் அநுமன், வாலி, சுக்கிரீவன், சடாயு முதலான பிறப்பால் விலங்காயும் கருத்தால் மக்களாயும் சுட்டப்படும் உயிர்களும் உண்டு. இவற்றையெல்லாம் நன்னூலாரின் மக்கள், தேவர், நரகர் என்ற வாய்ப்பாட்டில் அடக்க முடியாது. ஆகையால் நன்னூலாரின் உயர்திணை வரையறை 'அவ்வியாப்தியுடையதாய்க் குற்றப்படுகிறது. ஆனால், தொல்காப்பியரின் வரையறையோ வெனின் (மக்களாகக் கருதப்படுவோர் உயர்திணை) எக்காலத்துக்கும் இயையுடையதாவதோடு, தமிழ்மொழியின் இயல்பை உள்ளபடி உணர்த்தும் விபரண இலக்கணமாயும் அமைகிறது.

தொல்காப்பியரின் திணைப்பாகுபாடு காலங்கடந்தும் பொருத்தப்பாட்டுடன் விளங்குவதன் காரணம், தாம் (சொல்லதிகாரத்தில்) இலக்கணம் வகுப்பது மொழிக்கே அன்றி பொருளுக்கு அல்ல என்ற தெளிவினை அவர் கொண்டிருந்தமையாகும். சில சொற்கள் குறிப்பால் மக்களைச் சுட்டி நிற்பினும் மொழிவடிவில் அவை அஃறிணையாக அமைவதையும் தொல்காப்பியர் அவதானித்திருக்கிறார்.

***"குடிமை ஆண்மை இளமை மூப்பே***
***அடிமை வன்மை விருந்தே குழுவே***
***பெண்மை அரசே மகவே குழவி***
***தன்மை திரிபெயர் உறுப்பின் கிளவி***
***காதல் சிறப்பே செறற்சொல் விறற்சொல் என்று***
***ஆவறு மூன்றும் உளப்படத் தொகை,***
***அன்ன பிறவும் அவற்றொடு சிவணி***
***முன்னத்தி னுணரும் கிளவி எல்லாம்***
***உயர்திணை மருங்கின் நிலையின வாயினும்***
***அஃறிணை மருங்கிற் கிளந்தாங்கு இயலும்"***

- (தொல். சொல். 56)

இதன் பொருள்:
"குடிமை முதலாக விறற்சொல் லீறாகச் சொல்லப்பட்ட பதினெட்டு முளப்பட அன்ன பிறவும் அவற்றோடு பொருந்தித் தொக்கு முன்னத்தினுணருங் கிளவிகளெல்லாம், உயர்திணைப் பொருண்மேல் நின்றனவாயினும் அஃறிணை முடிபே கொள்ளும் என்றவாறு"
(தொல். சொல். 56, சேனாவரையம்)

அரசு ஆணையிட்டது. குழு ஆலோசித்தது. இவ்வாறான தொடர்களெல்லாம் உயர்திணையின் செயற்பாடு குறித்தனவே ஆயினும் மொழிநிலையில் அவை அஃறிணையாகவே கொள்ளப்படும். இது இன்றைய மொழி வழக்குக்கும் பொருந்துவதே. ஆனால் ஆராய்ச்சியாளர் சிலர் மேற்படி தொல்காப்பிய நூற்பார்வை வேறுவிதமாக விளங்கிக் கொண்டார்கள். அவ்விளக்கத்தின் வெளிப்பாடே பின்வரும் கூற்று.

"இருதிணை ஐம்பாற் பாகுபாடு நிலைபெறுவதற்கு முன்னர் மிகப்பழங்காலத் திராவிடமொழியில் எல்லாச் சொற்களும் ஒரே வகையாக, அஃறிணையாகக் கருதப்பட்டு வந்த நிலையிருந்ததென்று கூறலாம். இறை, அரசு, வேந்து, இல் முதலான சொற்கள் மிகப்பழயவை. அவை அஃறிணை வினைமுற்றுக் கொண்டே முடிந்துள்ளன. இறைவன், அரசன், இல்லாள் முதலான சொற்கள் பிற்காலத்தில் அமைந்தன"
(வேலுப்பிள்ளை, பக். 88, 89)

கால்டுவெல்லதும் வரதராசனதும் கருத்துக்களின் அடிப்படையில் மொழியப்பட்ட மேற்படி கூற்று மொழிவரலாற்றுக்குப் பொருந்துவதாகலாம். ஆனால் தொல்காப்பியரின் மேற்படி நூற்பா உணர்த்தமுற்படுவது அதுவல்ல. 'ஊர்சிரித்தது' என்றவாறாக இன்றும் வழங்கும் ஆகுபெயர் முதலானவற்றின் திணையை உணர்ந்துகொள்வதில் உள்ள சிக்கலை விடுவிப்பதே இங்கு தொல்காப்பியரின் நோக்கமாகிறது. மக்கள் என்ற உணர்வோடு சுட்டப்படும் எப்பொருளும் உயர்திணை, அல்லாதன அஃறிணை என்பதும் தமிழ்மொழி இலக்கணத்தைப் பொறுத்தவரையில் அந்த வகைபாடு சொல்லுக்குரியதேயன்றிப் பொருளுக்குரியதல்ல என்பதும் ஆதலால், அவ்வகைபாடு உணரப்படுவது சொல்லமைப்பாலேயே என்பதும் இங்கே கூறியவற்றால் உணரப்பட வேண்டிய உண்மைகள்.

உசாத்துணை:


| | |
|---|---|
| தொல்காப்பியம் சொல்லதிகாரம் | - கணேசையர் பதிப்பு |
| நன்னூல் - காண்டிகையுரை | - ஆறுமுகநாவலர் பதிப்பு |
| மு. வரதராசன் | - பொழில், சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை. |
| ஆ. வேலுப்பிள்ளை | - தமிழ் வரலாற்றிலக்கணம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2002. |
| அ. சண்முகதாஸ் | - தமிழ்மொழி இலக்கண இயல்புகள், பூபாலசிங்கம் புத்தகசாலை, 1997. |

# (பாடல் போட்டியில் 1ஆம் இடம்)
# சிறுவர் பாடல் (நற்பண்புகள்)



**சி**ன்னஞ் சிறு சிறுவர்களே....
நாட்டின் நாளை முத்துக்களே
வெள்ளை நிற உள்ளத்திலே
நல்லவற்றை விதைத்திடுவோம்.

நாம் வாழும் பாரினிலே
நற் செயல்கள் செய்திடுவோம்
தாய் தந்தை, பெரியோர்கள்
அனைவரையும் மதித்திடுவோம்

மூத்தோர் சொல் வாக்குகளை
நாள் தோறும் எண்ணிடுவோம்
எண்ணியதை எண்ணியாங்கு
சாதனைகள் நிகழ்த்திடுவோம்.

காலையிலே எழுந்திடுவோம்
கடமைகளை செய்திடுவோம்
பாடங்களை கற்று-பல
பட்டங்களை பெற்றிடுவோம்

கடவுளை நம்பிடுவோம்
கருணை பல பெற்றிடுவோம்
கள்ளத்தனம் செய்யாது
நேர்மை வழி நடந்திடுவோம்

பிறர் மனதை நோகாது
இனிய சொற்கள் பேசிடுவோம்
இன மத சாதியினை
இன் நொடியே தகர்த்திடுவோம்

நாட்டில் வாழும் எல்லோரும்
உறவுகளாய் எண்ணி - தினம்
ஒற்றுமையாய் வாழ்ந்திடுவோம்
ஊர் உலகம் போற்றிடுமே....

செல்வி **மு.சுலோசனா**
ஆரம்பப்பிரிவு "A" 2ஆம் வருடம்

# சிறுகதைப் போட்டியில் 1 ஆம் இடம்

# துளிர்விடும் நம்பிக்கைகள்



**கா**லை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்து வேகவேகமாக காலைக் கடன்களை முடித்துவிட்டு காலை உணவிற்காக இட்லியை வார்த்து அடுப்பில் வைத்துவிட்டு நிமிர்ந்த அருணாவிற்கு மூச்சு வாங்கியது. எழுந்து தனது வேலைகளை ஒவ்வொன்றாக செய்துவிட்டு இரண்டு பிள்ளைகளையும் பாடசாலைக்கு தயார்படுத்தி தானும் வேலைக்கு தயாராகவே மணி எட்டைத் தாண்டிவிடும். தனது வேதனையில் மூழ்கியிருந்த அருணாவிற்கு இட்லிப் பாத்திரத்தின் விசில் சத்தம் நனவு நிலைக்கு கொண்டுவந்தது.

நேரம் போய்விட்டதே என்று பதறியபடி இட்லியை இறக்கிவைத்து விட்டு "லோகேஸ் மாலா" என குரல் கொடுத்தவாறு பிள்ளைகளை எழுப்பினாள் அருணா. அந்த வேளையிலும் எந்தவித அசைவுமின்றி அசந்து தூங்கிக் கொண்டிருந்த தன் கணவனைப் பார்க்கையில் ஆத்திரம் வந்தாலும் எதுவுமிமே செய்ய முடியாமல் பிள்ளைகளைக் குளியலறைக்கு கூட்டிச் சென்றாள்.

அருணாவின் வீட்டைப் பொறுத்தவரை வாகனச் சாரதியாக கடமை புரிந்து கொண்டிருக்கும் கணவன் மாணிக்கமும் எண்பது வயதைத் தாண்டிவிட்ட மாமா, மாமியும் தரம் பதினொன்றிலும் தரம் எட்டிலும் படித்துக் கொண்டிருக்கும் லோகேஸ், மாலாவையும் கொண்ட அழகிய கூட்டுக்குடும்பம், அருணாவும் வவுனியா மத்திய கல்லூரியில் வணிகக்கல்வி ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருக்கின்றாள்.

நிற்பதற்கு கூட நேரமின்றி பம்பரமாக சுழன்று வேலை செய்து செய்து கொண்டிருந்த அருணா வயது போய்விட்ட மாமா, மாமியையும் கவனித்து, அவர்கள் தமது காலைக் கடன்களை முடிக்க உதவி செய்து தேவையான சாப்பாடு, மருந்துகளை எடுத்து வைத்துவிட்டு தனக்கும் பிள்ளைகளுக்கும் சாப்பாடு கட்டிய அருணாவிற்கு அப்போதுதான் தனது வகுப்பு மாணவனுக்கு மத்திய வங்கி ஆண்டறிக்கை புத்தகத்தை இன்று கொண்டுவந்து தருவதாக கூறியது ஞாபகம் வந்தது. அந்த ஆண்டறிக்கை புத்தகத்தை கூட பக்கத்து தெருவிலுள்ள கருணேஸ் ஆசிரியரிடம் கொடுத்திருந்ததும் அப்போதுதான் ஞாபகம் வர அருணா தவித்துப் போனாள்.

நேரமோ எட்டை நெருங்குகின்றது. என்ன செய்வதென்று தெரியாமல் தவித்த அருணா அருகிலிருந்த ஆசிரியர் வீட்டிலிருந்து புத்தகத்தை வாங்கி வருமாறு கணவன் மாணிக்கத்திடம் உதவி கேட்டாள். அதைக் கேட்ட மாணிக்கம் சிரித்துவிட்ட ~~உனக்கு வேற வேலையே இல்லையா? தெரிந்ததைப் படிப்பிச்சிட்டு பேசாம வாவன். உன்னை நம்பியே பிள்ளைகள் பள்ளிக்கூடம் வருகுதுகள். அதுகள் ரியுசனுக்கு போய் படிக்குங்கள். நீ ஒன்றும் படிப்பிச்சுக் கிழிக்கத் தேவையில்லை;; என்று கத்தி விட்டு போய்விட்டான்.

மாணிக்கத்திடம் உதவி கேட்கும் போதே அருணாவிற்கு மனதிற்கு உறுத்தியது. ஸ்கூல் ரீச்சர் என்றாலே மாணிக்கம் கேவலமாகத்தான் பேசுவான். அது ஏனென்று தெரியவில்லை. முன்னைய காலத்தில் தான் பாடசாலை ஆசிரியர் என்றால் மதிப்பு. தன் பிள்ளைக்கு படிப்பிக்கும் ஆசிரியருக்கு பெற்றோர் கொடுக்கும் மதிப்பை பார்க்கும் போதே புல்லரிக்கும். ஆனால் இன்று பாடசாலை ஆசிரியர்கள் என்றாலே கேவலமான மனப்பாங்குதான் சும்மா இருந்திட்டு சம்பளம் வாங்குகிற ஒரே தொழில் இந்த ஆசிரியத் தொழில் தான் என்ற நினைப்பு

அன்றொருநாள் கூட இப்படித்தான் ஆங்கிலமும் கணினிக் கல்வியும் படிக்கலென்று விருப்பத்துடன் வீட்டினரிடம் அனுமதி கேட்ட அருணாவிற்கு கணவனிடமிருந்து மட்டுமல்ல மாமா, மாமியிடமிருந்தும் நல்ல பேச்சு. வீட்டில இருக்கிற வேலைகளை ஒழுங்காக செய்யிறதை விட்டிட்டு படிக்கிறதென்று நேரத்தை வீணாக்க வேண்டாமாம்.

இன்றைய உலகின் நிலை பற்றி இவர்களுக்கு என்ன தெரியும், வகுப்பில் பிள்ளைகள் கேட்கிற கேள்விகளும் அவர்களுடைய ஆங்கில அறிவும். வகுப்பில் நாங்கள் படுகிறபாடு எங்களுக்கெல்லோ தெரியும்.

அதுமட்டுமா லோகேஸ் அன்று கொண்டு வந்த ஆங்கில புத்தகத்தை விளக்க நான் பட்டபாடு எல்லாத்தையும் பார்த்துக்கொண்டு இருந்திட்டு இவர்கள் இப்படிக் கதைக்கிறதைப் பார்க்க சிரிப்பாகவே இருக்கும்.

ஆண்டறிக்கைப் புத்தகம் இல்லாமலே பாடசாலைக்கு சென்ற அருணாவிற்கு அங்கு இருந்த சூழ்நிலையே பிடிக்கவில்லை. முதல் வகுப்பு தரம் பதினொன்றிற்கு வணிக பாடம். வகுப்பிற்கு போய் தனது கைப்பையை கதிரையில் வைக்கும் முன்பே ஒரு மாணவன் ஓடி வந்து ~~ரீச்சர் இன்று இணையத்தில செய்தி பார்த்தனீங்களா? அமெரிக்காவில் பொருளாதார வீழ்ச்சியாம்;; என்று சொன்ன போதே மாணவர்கள் எவ்வளவு வேகமாக இருக்கிறார்கள் என்பதும் ஆசிரியர்களின் நிலையும் கற்க வேண்டிய

நிலையின் முக்கியத்துவமும் விளங்கியது.

ஒருவாறு பாடத்தை முடித்துவிட்டு வகுப்பறையிலிருந்து வெளியேறிய அரணாவிற்கு பக்கத்து வகுப்பிலிருந்து எந்தவித சத்தமோ கூச்சலோ வராததோடு வகுப்பில் மயான அமைதி நிலவியதை பாரக்க ஆச்சரியமாக இருந்தது. ஒருவேளை வகுப்பில் மாணவர்கள் இல்லையோ என எண்ணியவாறு எட்டிப்பார்த்த அருணாவிற்கு ஒரே ஆச்சரியம். ஏனெனில் முழு மாணவர்களும் வகுப்பறையில் இருந்ததோடு மாணவர்கள் ஆர்வமாக கற்றுக்கொண்டிருந்தார்கள். கற்பித்துக் கொண்டிருந்தது ஓர் இளம் ஆசிரியர் அவ் ஆசிரியர் தலைமேல் எறிகருவியை பயன்படுத்தி கற்பித்துக் கொண்டிருந்தார். மாணவர்கள் கற்பதில் காட்டிய ஆர்வத்தை பார்த்த போதே அருணாவிற்கும் தானும் இதே போன்று கணினி போன்ற நவீன உபகரணங்களை பயன்படுத்திக் கற்பிக்க வேண்டும். தனது மாணவர்களும் ஆர்வமாக கற்க வேண்டும் என்ற ஆசை தோன்றியது. ஆனாலும் எனக்குத்தான் இவ் உபகரணங்களை இயக்கத் தெரியாதே என்று நினைத்த போது அவள் வீட்டினர் மீதே அருணாவிற்கு கோபம் வந்தது.

அருணாவும் எவ்வளவுதான் கேட்பது படிக்க வேண்டும். புதுப்புது விடயங்களை கற்று தனது மாணவர்களுக்கு தானும் கற்பிக்க வேண்டும் என்ற ஆசை இன்று நேற்றல்ல ஆசிரியத் தொழிலுக்கு வந்ததிலிருந்தே அருணாவின் மனதில் தோன்றிவிட்டது. ஆனாலும் வீட்டினர் விட்டால் தானே எப்போதும் வேலை, வேலை, வேலை தான்.

பாடசாலை ஆசிரியர்களுக்கு மதிப்பளிக்காத இந்த உலகத்தில் நாமும் நமது திறமையால் முன்னேற வேண்டும். ஆங்கில அறிவுடன் பல தொழில்நுட்ப அறிவும் பெற்று தேடல் மிக்க ஆசிரியர்களாக நாமும் மிளிர வேண்டும் என்ற ஆசையை சமூகம், குடும்பம் பிள்ளைகள் என்ற வட்டத்திற்குள் கட்டிப் போடுகிறார்களே என்ற கவலையில் பாடசாலையை விட்டு வெளியேறினாள் அருணா.

யோசனையோடு சென்ற அருணாவிற்கு மாலைநேர ஆங்கில, தகவல் தொழில் நுட்ப வகுப்புக்கள் இன்று ஆரம்பமாகின்றது என்ற அறிவித்தல் பலகையை பார்த்தபோதே நம்பிக்கை துளிர்விட்டது. என்ன நடந்தாலும் சரி நான் படிக்க வேண்டும் என்ற உறுதியோடு வகுப்பிற்கான அனுமதிப் பத்திரத்தை பெறுவதற்காக நம்பிக்கையோடு சென்றாள் அருணா.

**செல்வி. செ.றூபிகா**
வர்த்தகப் பிரிவு 2ஆம் வருடம்.

## கட்டுரைப் போட்டியில் 1ஆம் இடம்

# நிலைபேண் அபிவிருத்தியினை பேணுவதில் கல்விசார் ஆளணியினரின் பங்களிப்பு



இன்று வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் இந் நவீன உலகில் நிலையான அபிவிருத்தியை பேணுவதே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் மிக முக்கியமான பிரச்சினையாக தலையெடுத்து வருகின்றது. அந்த வகையில் நிலை பேண் அபிவிருத்தி என்பது தற்காலத்தில் உள்ள வளங்களை நாமும் பயன்படுத்திக்கொண்டு தேவையான அளவினை பெற்றுக்கொண்டு எதிர்கால சந்ததியினரும் பயன்படுத்தும் வகையில் அவ் வளங்களை எதிர்கால தலைமுறையினருக்கு வழங்குவது எனலாம். இதில் இவ் வளங்களைப் பேணுவதில் உலக மக்கள் அனைவரும் செயற்பட வேண்டும்.

அந்த வகையில் கல்விசார் ஆளணியின் பங்களிப்பு என்ற வகையில் நோக்குவோம் முதலில் கல்வி என்று நோக்கும் போது அது மனிதர்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகும்.

நிலைபேண் அபிவிருத்தியில் நிலைபேண் வளங்களாக பௌதீக வளங்களையும். பண்பாட்டு வளங்களையும் அடுக்கலாம். அந்த வகையில் பௌதீக வளங்கள் என்பது பெற்றோலியம், நிலக்கரி, நீர், நிலம் வளி போன்றவற்றை கூறலாம். இவை பற்றிய அறிவினை கல்விசார் ஆளணியினர் பெற்றுள்ளனர். அந்த வகையில் கல்விசார் ஆளனியினர் பாடசாலை, மற்றும் பல்வேறு தொழில்சார் நிறுவனங்களில் தொழில் புரிகின்றனர். இவ்வாறான வளங்கள் எவ்வாறு அழிவடைகின்றது. என்று நோக்குகையில் பௌதீக வளங்கள் அளவுக்கு அதிகமாக நுகரப்படுகின்றன. மற்றும் வளங்களை அசுத்தப்படுத்துதல் இவை இயற்கையாலும் மனித செயற்பாடுகளாலும் நடைபெறுகின்றது. அந்த வகையில் மனிதன் தனது ஆதிக்கத்தால் இவற்றை அழிக்கின்றான் உதாரணமாக நிலத்தை எடுத்து நோக்குகையில் மனிதன் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக நிலத்தை ஆழமாகத் தோண்டி மண்ணை அகழ்கின்றான். உயர்ந்த பல மாடிக் கட்டிடங்களை

அமைக்கின்றான். நிலத்தில் பல அணு ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றான். இவை நிலவளத்தை அழிப்பதாகக் காணப்படுகின்றது.

நீரை எடுத்து நோக்கும் போது இயற்கையாக இவ்வளம் அசுத்தமாக்கப்பட்டாலும் மனிதனின் அபிவிருத்தியான செயற்பாடுகள் அதிகமாகவே காணப்படுகின்றது. நீரில் அதாவது கடலில் பல அணு ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றான். கடலில் போக்குவரத்து செய்வதாகக் கூறிக்கொண்டு போக்குவரத்தினால் கடலில் எண்ணெய் கசிவுகள். எண்ணெக்கழிவுகள் போன்ற அனர்த்தங்களை ஏற்படுத்துகின்றான்.

வளியை எடுத்து நோக்கும் போது வளியிலும் மனிதனின் ஆராய்ச்சி காரணமாக வளி மாசடைந்து மனிதனுக்கும் ஏனைய விலங்குகளுக்கும் நோய்கள், தொற்று நோய்களை ஏற்படுத்துகின்றான். மனிதனின் அளவுக்கு அதிகமான ஆராய்ச்சி, நவீன கண்டுபிடிப்பு, நவீன வளர்ச்சி காரணமாக இயற்கையாக காணப்படும் வாயுக்களின் மாற்றம் காரணமாக காலநிலை மாற்றமே ஏற்படுகின்றது. மற்றும் ஓசோன் படை சிதைவு, புவிவெப்பமடைதல், பனிமலை உருகுதல், கடல்நீர் மட்டம் அதிகரித்தல், கரையோர மண் அரிப்பு அதிகமாதல், உயிரின அழிப்பு, இயற்கை வட்டம் அழிவடைதல் போன்ற ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. இவை பௌதீக வளங்கள் எவ்வாறு அழிவடைகின்றது என்பதாகும்.

பண்பாட்டு வளங்கள் என்று நோக்குகையில் உணவு, தளபாடங்கள், கட்டிடங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம் இவை மனிதனால் அளவுக்கு அதிகமாக நுகரப்படுவதனாலும் பாதுகாப்பாக பேணமுடியாமலும், அழிப்பதாலும், இவ்வளங்கள் அழிவடைகின்றன. அந்த வகையில் உணவு என்று நோக்குகையில் அவை மனிதனால் வீண் விரயம் செய்யப்படுவதாகும். மனிதன் தனக்குத் தேவையான அளவை எடுக்காமல் பயன்படுத்தாமல் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தி மீதியை வீணாக்குதல்.

தள பாடங்களை எடுத்து நோக்குகையில் மனிதன் மரங்களை அழித்தும், பிளாஸ்ரிக், இரும்பு போன்றவற்றைப் பயன்படுத்தி தளபாடங்களை

உருவாக்கி அவை தேவையின்றிபோகும்போது அதை மீள பாவனைக்குப் பயன்படுத்துவது இன்றி வீணாக்குதல். அதேபோல் கட்டிடங்களை வீணாக இடித்தல், பாழாக்குதல் ஏனையவர்கள் அதனைப் பயன்படுத்தாத வண்ணம் அதை சிதைவடையச் செய்தல்.

இவ்வாறான அழிவுகளை மனிதன் வளங்களில் ஏற்படுத்தி வருகின்றான். இதை நிறுத்த வேண்டும். வளத்தினை பேண வேண்டும். இதில் கல்விசார் ஆளணியினரின் பங்களிப்பு என்று நோக்கும் போது கல்விசார் ஆளணி தமது பிரதேசமக்களுக்கு இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பாடசாலை, சமய நிறுவனங்கள், குடும்பம், சங்கங்கள் போன்றவற்றில் கருத்தமர்வுகள் இது பற்றிய சுவரொட்டிகள், படக்காட்சிகள் கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றினை செயற்படுத்த வேண்டும். மற்றும் வளங்கள் எமக்குத் தேவையான அளவினை பிரயோகிக்க சட்டதிட்டங்களை ஏற்படுத்துதல் மக்களுக்கு வளங்களை மீள் சுழச்சிக்கு பயன்படுத்தும் அறிவு சார்பான பயற்சி பட்டறைகளை ஏற்படுத்துதல் இவ்வாறான செயற்பாடுகளை கல்விசார் ஆளணி மேற்கொண்டு அழிவடைந்து வரும் இவ்வுலகினையும், எதிர்கால சந்ததியினரின் தேவையையும், வாழ்வினையும் மனதில் கொண்டு வளங்களைப் பேணி எமது வாழ்வினைச் சிறப்படையச் செய்வதுடன் எதிர்கால சந்ததியினரின் வாழ்வினையும் உயர்வடையச் செய்ய ஒவ்வொரு மனிதனும் உணர்ந்து வாழ்வினை சிறப்படையச் செய்வதோடு இவ்வுலகினையும் வளங்களையும் பேணி உயர்வடையும் என்றும் வளமுடன் வாழ வள கூறுவோம்.

**செல்வி.ம.அஜிதா மயூரினா**

ஆரம்பப்பிரிவு 2 ஆம் வருடம்.

"ழ" கரத்தின் சிறப்பு வேறு எந்த மொழியிலும் இல்லாத "ழ" ஒலியானது தமிழ் மொழிக்கே உரிய தனித்துவ ஒலி. இதுவே தமிழ் மொழியின் தனிச் சிறப்பு

### கவிதைப் போட்டியில் 1ஆம் இடம்

# யார் அறிவார்?



**வா**னம் மழை பெய்து நாளாச்சு
இன்னும் நீரோடித் தீரவில்லை
என் வீட்டில்.....

அப்பாக்கு ஒரு நாள் கால் போச்சு
காசும் ஓடிப் போச்சு
வெற்றுப் பாத்திரங்கள்
வீட்டில் நிறைஞ்சு போச்சு
எங்கள் வயிறுகள் போலவே!

அடுக்களை அணைந்து போச்சு
ஆம்பி பூத்துப்போச்சு
அரிசி
அதுதான்
என் வீட்டிப் புதுவருடப் பலகாரம்
மரவள்ளிக் கிழங்கும் ஒடியலும்
என் வீட்டுப் புரியாணி

ஒரு நாள்....
"தங்கைச்சிக்கு காய்ச்சல்"
பனடோலுக்கு
பக்கத்து வீட்டில் பிச்சை!

நித்தம் பூத்தொடுத்து
நிதமும் தாள் பணிந்தவள்
கண்கெட்ட கடவுள்கள்
கைவிட்டுப் போச்சு
கண்மூடிப் போனாள்!
'கடவுள்'
அவனென்ன கல்தானே!
அவனுக்கு பசியென்ன பாசமென்ன

பெட்டி வாங்க
பெட்டகத்தில் ஒன்றுமில்லை
பாயில் சுருட்டி வைத்து
பத்திரமாய் புதைத்து விட்டோம்.

என் வயிற்றின் பசியும்
என் பாசக் கொதிப்பும்
யார் அறிவார?

அன்புடன்
தாழ்மையுடன்....

செல்வன் **ஜெ.ஸ்ரீபன்**
கிறிஸ்தவப் பிரிவு
2011/2013

## குறு நாடகப் பிரதியாக்கப் போட்டியில் 1ஆம் இடம்

(வாத, விவாத அரங்கினை மாதிரியாக கொண்டது)

# மனமாற்றம்



காட்சி-1

பாத்திரங்கள் : ஆசிரியர், குமார், குமாரின் தந்தை, கோமாளி - 1

வெற்று மேடையில் பாத்திரங்கள் தோன்றுதல் விரும்பினால் மேடைப் பொருட்களைச் சேர்க்கலாம்

(மேடையின் பின் இடது பக்கத்திலிருந்து குமார் அழுதபடி முன்னோக்கி வருதல் பின்னால் ஆசிரியர் கையில் தடியுடன் வருதல்)

குமார் :- ஐயோ! அம்மா வலிக்குது சேர் அடிக்காதேங்கோ
சேர்............சேர்..................அடிக்காதேங்கோ

ஆசிரியர் :- உன்னை அடிக்காம என்னடா செய்யிறது. ஆராத்தி எடுக்கவே சொல்லுறாய் (கோபமாக) நானும் எத்தின தடவதான் பொறுத்துக் கொள்ளுறது. இதுதான் உனக்கு கடைசி தடவை இனிமேல் இப்படி செய்தியெண்டா பள்ளிக்கூடத்தவிட்டு கலைச்சுப்போடுவன். போடா போய் இடத்தில இரடா

(கோபத்துடன் ஆசிரியர் மேடையின் முன் வலது பக்கத்தால் வெளியேறுதல்)

(மெல்லிய சோகமான இசை பின்னணியாக இசைக்கப்படுதல்)

குமார் :- (அழுதபடி மேடையின் முன் வந்து பார்வையாளரைப் பார்த்தவாறு)
எனக்கு ஏன் சேர் அடிச்சவர்? எனக்கு ஏன் சேர் அடிச்சவர்?
அப்பிடி நான் என்ன தப்பு செய்தனான்?-
அப்படி ஒரு தப்பும் செய்யேல
நான் ஒரு தப்புமே செய்யேல
(குமார் மேடையின் இடது பக்கத்தில் அழுதவாறு நிற்க மேடையின் பின் வலது பக்கத்திலிருந்து குமாரின் தந்தை கோபத்துடன் முன் மேடைக்கு வருதல்)

(பின்னணியில் இருந்து கோரஸ் குழு பின்வரும் பாடலை துள்ளல் இசையுடன் பாடுதல்)

பாடல்:- யாரவன் யாரவன் யாரவன்
என் மகனை அடிச்சவன் யாரவன்-2

தந்தை :- (பார்வையாளரைப் பார்த்து கோபத்துடன்) இந்த சங்கரப் பிள்ளையின் மகனை அடிக்கிறதுக்கு எந்த வாத்திக்கு துணிவிருக்கு. எந்த வாத்திக்கும் பிள்ளையை அடிக்கிற உரிமை இல்ல விளங்கிச்சுதோ எந்தப் பிள்ளையையும் அடிக்கிற உரிமை எந்த வாத்திக்கும் இல்ல. இப்பவே அந்த வாத்திய ரெண்டுல ஒண்டு பாக்கிறன்.

(பலத்த சப்தம் ஒன்றுடன் கோமாளி-1 மேடையின் பின்பக்கத்திலிருந்து துள்ளிக் குதித்தவாறு வருதல்)

கோமாளி -1 :- ஐயா பெரியவரே! நீங்கள் சொல்லுறது நூற்றுக்கு நூறுவீதம் சரி. இப்பவே போய் அந்த வாத்தியார ரெண்டுல ஒண்டு பாப்பம் என்ன ஐயா சரிதானே நான் சொல்லுறது.

தந்தை :- உமக்கென்ன நான் சொல்லுறது நக்கலா இருக்குதோ? என்ர மகனுக்கு அடிச்சுப்போட்டார் அந்த வாத்தியெண்ட கோபத்தில் நான் இருக்கிறன் நீர என்னடா எண்டால் நையாண்டி பண்ணுறீர்.

கோமாளி -1 :- பெரியவரே நான் ஒண்டும் நையாண்டி பண்ணேல்ல. உங்களமாதிரித்தான் ஊரில் நிறையப் பேர் இருக்கினம். உங்களுக்கென்ன அந்த வாத்தியார ரெண்டில ஒண்டு பாக்கவேணும் அப்பிடித்தானே. சரி அப்ப நான் சொல்லுறபடி கேட்டால் அது நடக்கும்.

தந்தை :- சரி சொல்லும் நான் கேக்கிறன்.

கோமாளி -1 :- இப்ப உங்கட மகன கூட்டிக்கொண்டு வீட்ட போங்கோ

நாளைக்கு எப்பிடியும் அந்த வாத்தியார் இங்க வருவார் அப்ப நாங்கள் அவரை வடிவா கவனிச்சுக் கொள்ளுவம் என்ன நான் சொல்லுறது சரிதானே

தந்தை :- சரி சரி நான் இப்ப என்ற மகன கூட்டிக்கொண்டு போறன் ஆனா நாளைக்கு அந்த வாத்திய ரெண்டுல ஒண்டு பாக்காம விடமாட்டான். குமார் வாடா நீ
(தந்தையும் குமாரும் மேடையின் முன் இடது பக்கத்தால் வெளியேறுதல்)

கோமாளி -1 :- பார்வையாளரைப் பார்த்தவாறு நாளைக்கு ரெண்டில ஒண்டு பார்க்கப்போறாராம் ம்ம் பாப்பம் பாப்பம்
(கோமாளி மேடையில் முன் இடது பக்கத்தால் வெளியேறுதல்)

(காட்சி - முடிவடைதல்)

காட்சி II

பாத்திரங்கள்: குமார், குமாரின் தந்தை, கோமாளி -1, கோமாளி -2, ஆசிரியர்

மெல்லிய இசை இசைக்கப்படுதல்
(ஆசிரியர் முன் வலது பக்கத்தால் மேடையினுள் பிரவேசித்தல்)

ஆசிரியர்:- (மெல்லிய குரலில்) குமார்.... குமார்..... குமார்.....

(மேடையின் பின் இடது பக்கத்திலிருந்து மேடையின் முன் பகுதியை நோக்கி குமார் வருதல்)

குமார் :- சேர்.... (தயங்கியபடி)

ஆசிரியர் :- குமார் சொறிடா நான் உன்னை அடிச்சிருக்க கூடாது அதுதான் மனசு கேக்கல உன்னப்பார்த்துட்டு போகலாம் எண்டு வந்தனான். எதையும் மனசில்வச்சிருக்காத இந்தா இந்த பாக்கில எள்ளுருண்டை கிடக்கு சாப்பிடு (ஆசிரியர் பை ஒன்றை குமாரிடம் கொடுத்தல்)

குமார் :- (பையை வாங்கியபடி) பரவாயில்ல சேர் என்மேல அன்புகாட்டுறதுக்கும் அடிக்கிறதுக்கும் உங்களுக்கு உரிமை இருக்கு சேர்.

(மேடையின் பின்பக்கத்திலிருந்து கோமாளி 1, தந்தை ஆகியோர் மேடையின் முன்பகுதிக்கு வருதல்)

கோமாளி-1 :- இங்க இவற்ற கதையக் கேட்டீங்களே அடிக்கிறதுக்கும், அரவணைக்கிறதுக்கும் ஆசிரியருக்கு உரிமை இருக்காம் (சிரித்தபடி)

தந்தை :- அதுதானே உரிமை இருக்கோ? என்ர பிள்ளைய அடிக்கிற உரிமை எவருக்கும் இல்ல. இவர் அடிக்கிறதுக்கே என்ர பிள்ளைய பெத்து விட்டனான்

(மேடையில் பின் வலது பக்கத்திலிருந்து கோமாளி 2மேடையின் முன்பகுதியை நோக்கி வருதல்)

கோமாளி -2 :- இப்ப உங்களுக்கு என்ன பிரச்சினை?

கோமாளி -1 :- ஏன் நீர் தீர்த்து வைக்கப் போறீரோ?

கோமாளி -2 :- சொன்னா தீத்து வைக்கலாம் தானே அதுதான் கேக்கிறன்.

தந்தை :- என்ர பிள்ளைய இந்த வாத்தி அடிச்சுப் போட்டார் அதுதான் பிரச்சினை

கோமாளி -1 :- ஒரு ஆசிரியர் மாணவன எப்படி அடிக்கலாம்? அதுதான் எங்கட பிரச்சினை

கோமாளி -2 :- ஐயா ஒரு ஆசிரியர் எப்படி மாணவர்மேல அன்பு காட்டுறது முக்கியமோ அது போல மாணவன் தவறு செய்யும்போது அவன திருத்த வேண்டியதும் முக்கியம் தானே

தந்தை :- மாணவர அடிக்க கூடாதெண்டு கவர்மெண்ட் சட்டம் போட்டிருக்கு அது உமக்கு தெரியுமோ

கோமாளி -1 :- இவருக்கு அது தெரிஞ்சிருந்தா இப்படிக் கதைச்சிருக்க மாட்டார் பாவம்

கோமாளி 2 :- எனக்கு மட்டுமில்லை இங்க இருக்கிற எல்லாருக்கும் அது தெரியும் சரி (தந்தையை பார்த்து) உங்கட பிள்ளையையே கேட்பம். தம்பி உன்ன திருத்துற உரிமை உன்ர ஆசிரியருக்கு இல்லயோ?

குமார் :- ஏன் இல்லை எனக்கு படிப்பிக்கிற ஆசிரியருக்கு என்னில் அன்பு காட்டுற உரிமை நான் தவறு செய்தா திருத்துற உரிமை எல்லாம் இருக்கு.

கோமாளி-1 :- உமக்கு படிப்பிக்கிற ஆசிரியருக்கு உரிமை இருக்கெண்டால் இங்க இருக்கிற மற்ற ஆசிரியர்களுக்கெல்லாம் இல்லயோ

கோமாளி-2 :- அதுதானே அவையளுக்கு இல்லயோ?

குமார் :- என்ர ஆசிரியருக்கு மட்டுமல்ல எல்லா ஆசிரியருக்கும் உரிமை இருக்கு மாணவர் நலனில் அக்கறை கொண்ட எல்லா ஆசிரியருக்கும் மாணவர்களை அன்புகாட்டுற எல்லா ஆசிரியர்களுக்கும் உரிமை இருக்கு.

கோமாளி-1 :- எல்லா ஆசிரியர்களுக்குமோ? அப்படியெண்டா, எல்லா ஆசிரியர்களும் மாணவர்களோட அன்பா நடக்கினம் எண்டு நீர் நினைக்கிறீரோ

ஆசிரியர் :- எல்லா ஆசிரியரும் அப்பிடி இல்லத்தான் ஆனா அவையள் தங்கள மாத்திக் கொள்ளலாம்

தந்தை :- அவையள் மாறுவினமோ

கோமாளி-2 :- மாறினா நல்லதுதானே

தந்தை :- அவை மாறினா எங்கள மாதிரி பெத்தவங்களுக்கும் சந்தோசம்தானே

கோமாளி-1 :- முடிவா என்ன சொல்லுறாய் ஆசிரியர் மாணவர்கள

அடிக்கலாமோ? அடிக்க கூடாதோ?

கோமாளி-2 :- மாணவர்களின்ர உடலும் உள்ளமும் பாதிக்காத வகையில் தண்டனைகளை வழங்கலாம்.

கோமாளி-1 :- மாணவர்களின்ர உடலும் உள்ளமும் பாதிக்காமல் எப்படி தண்டன வழங்குறது?

ஆசிரியர் :- மாணவன் செய்த தவறை அவளே உணர்ந்து கொண்டால் தண்டனைகள் தேவையில்லயே

கோமாளி.1 :- ஓ அப்பிடியெண்டால் மாணவர்கள் தவறு செய்யேக்க ஆசிரியர்கள் அத சுட்டிக்காட்டி அவர்கள் அத உணர்ந்து கொள்ளச் செய்தா சரிதானே என்ன

கோமாளி-2 :- இப்பதான் நீர் விசயத்துக்கு வந்திருக்கிறீர். ஒரு சிற்பிக்கு சிலையை வடிக்கும் போது இருக்கிற கவனம்தான் ஆசிரியருக்கும் மாணவர்மேல் இருக்க வேணும்

குமார் :- ஓம் ஓம் நாங்களும் நல்ல சிலைகளாக மண்ணில் ஒளிர வேண்டுமெண்டா ஆசிரியர்களுக்கு ஒத்துழைக்க வேணும். அதோட எங்கட நல்ல நடத்தைகளால ஆசிரியர்களுக்கு எங்கள்மேல விருப்பத்த ஏற்படுத்த வேணும்

கோமாளி-2 :- இவர் சொல்லுறதும் சரிதான், மாணவர்களும் ஒழுங்கா நடந்தால் ஆசிரியர்களுக்கும் சந்தோசம் தானே

கோமாளி-1 :- அது போல ஆசிரியர்களும் ஒழுங்கா நடந்தால் மாணவர்களுக்கும் சந்தோசம் தானே (பார்வையாளர்களைப் பார்த்து கூறுதல் பார்வையாளர் ஓம்...ஓம் எனக் கூறக்கூடும்)

கோமாளி-2 :- சரி.. சரி இதே சந்தோசத்தோட நாங்கள் ஒரு பாட்டுப் பாடுவம் என்ன (பார்வையாளரைப் பார்த்து) நீங்கள் பாடுவீங்களோ (பார்வையாளர் ஓம் என்று கூறக்கூடும்)

சரி பாட்ட முதல்ல நாங்கள் பாடுறம் பிறகு நீங்கள் பாடுங்கோ...

பாடல்:- சின்னஞ்சிறு விதைகள் -நாம்
மண்ணில் வந்த செடிகள்
செழுமையும் முழுமையுமாய்
எம்மை சிற்பங்களாக்கிடுவீர்
எம்மை சிற்பங்களாக்கிடுவீர்

சிகரத்தினை தொட்டே - நாம்
சிறப்புடன் வாழ்வதற்கே
சிந்தையினை முழுதாய்
எம் சிந்தையின் பால் வைத்தீர்
எம் சிந்தையின் பால் வைத்தீர்

வையகம் போற்றிடுமே - உம்மை
வையகம் போற்றிடுமே
என்றும் நல் ஆசான்களாய்
எம் இதயத்தில் இருந்திடுவீர்
நீர் இதயத்தில் இருந்திடுவீர்

(பாடலை பார்வையாளருக்கு சொல்லிக் கொடுத்து பாடச்செய்தல் அவர்களுடன் நடிகர்களும் இணைந்து பாடுதல்)

(திரை மூடுதல்)

செல்வன் **நி.ரஞ்சித்கண்ணா**
ஆரம்பப்பிரிவு
2ஆம் வருடம்

**முத்தமிழ் விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட போட்டி முடிவுகள் 2012**
**2ம் வருட ஆசிரிய மாணவர்கள் விபரம்.**

01. கட்டுரை :- 1ம் இடம் :-செல்வி ம.அஜிதா மயூரினா ஆரம்பப்பிரிவுB
2ம் இடம் :-செல்வி தே.சிந்துஜா - வர்த்தகப்பிரிவு
செல்வன் சு.றிபான் - ஆரம்பப்பிரிவு B

02. சிறுகதை :- 1ம் இடம் : செல்வி செ.றூபிகா- வர்த்தகப்பிரிவு
2ம் இடம் : செல்வி சி.கார்த்திகா - ஆரம்பப்பிரிவு A
3ம் இடம் : செல்வி பெ.ரோகினி - வர்த்தகப்பிரிவு A

03. பாடலாக்கம் :- 1ம் இடம் : செல்வி மு.சுலோசனா - ஆரம்பப்பிரிவு A
2ம் இடம் : அருட்சகோதரி ஜோ.அஞ்சலிக்கா கிறிஸ்தவபிரிவு
3ம் இடம் : செல்வி க.லிடியா ஜெயராஜினி கிறிஸ்தவபிரிவு

04. குறுநாடகப் பிரதி ஆக்கம் :- 1ம் இடம் : செல்வன் நி.ரஞ்சித்கண்ணா ஆரம்பப்பிரிவு B
2ம் இடம் : செல்வி நி.தனஞ்செனி ஆரம்பப்பிரிவு A

05. கவிதை :- 1ம் இடம் : செல்வன் ஜெ.ஸ்ரீபன்-கிறிஸ்தவப்பிரிவு
2ம் இடம் : செல்வன் செள.யசோதரன் இந்துசமயப்பிரிவு
3ம் இடம் : செல்வன் திரு.ருசாந்த சற்குணம் ஆரம்பப்பிரிவு A

06. பேச்சு :- 1ம் இடம் : செல்வன் த.சாந்தகுமார்-கிறிஸ்தவபிரிவு
2ம் இடம் : செல்வி இ.மணிமேகலை- விவசாயப்பிரிவு
3ம் இடம் : செல்வி த.வத்சலா - ஆரம்பப்பிரிவு B

07. அறிவிப்பாளர்: 1ம்இடம் : செல்வி.க.லிடியா ஜெயராஜினி கிறிஸ்தவப்பிரிவு
2ம் இடம் : செல்வன் அ.கா.அ.நஸாத் உடற்கல்விப்பிரிவு
3ம் இடம் : செல்வி மு.உ.நூறுல் முபாஸா விவசாயப்பிரிவு

08. சித்திரம் :- 1ம் இடம் : செல்வன் ப.பிரதீபன் - உடற்கல்விப்பிரிவு
2ம் இடம் : செல்வன் அ.றொ.அனோஜன் உடற்கல்விப்பிரிவு
3ம் இடம் : செல்வன் நி.ரஞ்சித் கண்ணா ஆரம்பப்பிரிவு B

# தமிழ் மன்றம் - 2011-2012
# நிர்வாக உறுப்பினர்கள் விபரம்.

| | | |
|---|---|---|
| போசகர் | :- | திரு.ந.பார்த்தீபன் |
| ஆலோசகர் | :- | திரு.பொ.சத்தியநாதன் |
| தலைவர் | :- | செல்வன் சு.பிரதீபன் - ஆரம்பப்பிரிவு B -2ம் வருடம் |
| செயலாளர் | :- | செல்வன் த.பிரஜாபதி - ஆரம்பப்பிரிவு A - 2ம் வருடம் |
| பொருளாளர் | :- | செல்வி சோ.பிருந்தா - வர்த்தகப்பிரிவு - 2ம் வருடம் |
| பத்திராதிபர் | :- | செல்வன் த.சாந்தகுமார் - கிறிஸ்தவப்பிரிவு - 2ம் வருடம் |
| உபதலைவர் | :- | செல்வி வ.கௌதமி - விவசாயப்பிரிவு - 2ம் வருடம் |
| உபசெயலாளர் | :- | செல்வன் மு.இ.மு.சனூஸ் - உடற்கல்விப்பிரிவு - 2ம் வருடம் |
| உபபத்திராதிபர் | :- | செல்வி மு.நந்தசுலோசினி - இந்துசமயப்பிரிவு - 2ம் வருடம் |


வகுப்புப் பிரதிநிதிகள்.

2ம் வருடம்.

| | |
|---|---|
| ஆரம்பப்பிரிவு A | - செல்வன் தி.ருசாந்த சற்குணன் |
| ஆரம்பப்பிரிவு B | - செல்வன் செ.நிசாந்தன். |
| கிறிஸ்தவப் பிரிவு | - செல்வன் ஜெ.ஸ்ரீபன் |
| இந்து சமயப் பிரிவு | - செல்வன் இ.லக்ஸ்மிகாந்தன் |
| விவசாயப் பிரிவு | - செல்வி கி.அமிர்தவர்சினி |
| வர்த்தகப் பரிவு | - செல்வி இ.கோசிதா |
| உடற்கல்விப்பிரிவு | - செல்வன் மு.றொபட் ஜோன்சன் |

1ம் வருடம்

| | |
|---|---|
| வர்த்தகப்பிரிவு A | - செல்வன் மு.ஹ.மு.பிஷ்றி |
| வர்த்தகப்பிரிவு B | - செல்வன் ரா.நிரஞ்சன் |
| ஆரம்பப்பிரிவு | - செல்வி.க.தரண்யா |
| கிறிஸ்தவபிரிவு | - செல்வி சி.மேரி எமல்டா |
| இந்துசமயப்பிரிவு | - செல்வன் வ.அம்பிகைசீலன் |
| விவசாயப்பிரிவு | - செல்வன் கு.சிறிசெயந்தன் |
| உடற்கல்விப்பிரிவு | - செல்வன் வி.விமலசிறி |
| கணிதப்பிரிவு | - செல்வன் ப.ஆஷிக் அகமட் |
| விஞ்ஞானப்பிரிவு | - செல்வன் அ.லெ.மு.நளீர் |



அட்டைப்பட ஓவியப் போட்டியில்
1ம் இடம் பெற்ற
செல்வன் ப.பிரதீபன்
உடற்கல்வி பிரிவு 2ம் வருடம்



பேச்சுப் போட்டியில்
1ம் இடம் பெற்ற
செல்வன் த.சாந்தகுமார்
கிறிஸ்தவ பிரிவு 2ம் வருடம்



அறிவிப்பாளர் போட்டியில்
1ம் இடம் பெற்ற
செல்வி க.லிடியா ஜெயராஜினி
கிறிஸ்தவ பிரிவு 2ம் வருடம்

## தமிழ்மன்ற நிர்வாக உறுப்பினர்கள் - 2011






Printed By: Vaani Computer Printing Centre, Vavuniya.
T.P: 024 2223658, email: vaaniprinters@yahoo.com